பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 09 வியாழக்கிழமை 22-03-2001 தொலைபேசி: 3378 ஒலி: 93

மங்கையரின் அங்கமெ லாட
நகைகளால் மின்னிப் பேசிட
இன்றே விரையுங்கள்!
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1603)

## முல்லைத்தீவில் கிபிர். மிக்விமானம் குண்டுவீச்சு கணவன் மனைவி உட்பட நால்வர் சிதறிப்பலி

### 12 பேர் காயம்;22 குடிசைகள் தீக்கிரை

(வவுனியா முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பகுதியில்நேற்றுக்காலை மிக். கிபிர்விமானங்கள் நடாத்திய ஆறுமணிநேரக் குண்டுத்தாக்குதலில் கணவன்மனைவி உட்பட நான்கு பொதுமக்கள் உடல் சிதறிப்பலியாகி யுள்ளனர் 15பேர் படுகாயமடைந்துள்ளனர்முல்லைத்தீவு சுண்டிக்குளம் கடற்கரை மீனவர் கிராமத்தில் நேற்றுக்காலை 6மணிமுதல்நண்பகல்வரை சுமார் ஆறுமணித்தியாலங்கள் 4கிபிர் மிக்குண்டுவீச்சு விமானங்களின் குண்டுத் தாக்குதலாலும் கடற்பீரங்கிகளின் குண்டுத்தாக்குதலாலும் 22குடிசைகள் தீக்கிரையாகினஇதனால்1500பேர்இடம்பெயர்ந்துபாதுகாப்பான இடங்களில்தஞ்சம் புகுந்துள்ளனர். (8ம் பக்கம்பார்க்க)

## நெதர்லாந்தவர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

நெதர்லாந் நாட்டைச் சேர்ந்த ஒருவர் நேற்றிரவு அவர் தங்கியிருந்த வீட்டில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மொறட்டுவையில் நடந்த இக்கொலை தொடர்பாக பொலீஸார்விசாரணைசெய்து வருகின்றனர். (வ

## முல்லைக் கடற்பரப்பில் மோதல்

# கடற்படையின் டோறா மூழ்கடிப்பு

# 8படையினர் பலி; ஆயுதங்கள்மீட்பு!

### தற்பாதுகாப்புத் தாக்குதலென புலிகள் அறிவிப்பு

(நமது நிருபர்)

**முல்லைக்கடற்பரப்பில் கடல்நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்புலிகள் மீதுகடற்படையினர் வலிந்துநடத்திய தாக்குதலை முறியடிக்க புலிகள் நடாத்திய தற்காப்புத் தாக்குதலில் கடற்படையினரின் அதிவேக டோறாப் படகொன்று முற்றாக அழிக்கப்பட்டுவிட்டதாகவும் அதில் இருந்த 8 கடற்படையினர் கொல்லப்பட்டதாகவும், அப்படகில் இருந்த நவீன ரக ஆயுதங்கள் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டதாகவும், 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்துள்ளது.**

நேற்று அதிகாலை இடம் பெற்ற இச் சம்பவத்தில் திருமலையில் இருந்து காங்கேசன் துறைக்குச் சென்று கொண்டிருந்த இரண்டு டோறா படகுகள் முல்லைத்தீவு கடற் பகுதியில் இருந்து 8 கிலோ மீற்றர் தொலைவில் வைத்து கடற்புலிகள் வழிமறித்துத் தாக்கியதில் ஒரு டோறா படகு முற்றாக சேதமடைந்து மூழ்கியதாகவும், அதில் பயணம் செய்த 8 கடற்படையினரைக் காணவில்லையென்றும்12பேர் காப்பாற்றப்பட்டதாகவும் அரசு அறிவித்துள்ளது;

இத் தாக்குதல் சம்பவம் பற்றி பக்கச் சார்பற்ற செய்திகள் தெரிவித்திருப்பதாவது:

முல்லைக் கடற் பரப்பில் இடம் பெற்ற இம் மோதல் சம்பவத்தில் இலங்கைக் கடற் படையினருக்கு உதவியாக மேலதிக கடற்படையினர் திருமலையில் இருந்தும் காங்கேசன் துறையிலிருந்தும் யுத்த முனைக்கு அனுப்பப்பட்டதாகவும் இப் படையினருக்கு உதவியாக நான்கு யுத்தவிமானங்கள் முல்லைக் கடற்கரை மீனவ குடியிருப்புக்கள் மீது

→ 8ஆம் பக்கம் பார்க்க

## எரிக்சோல்-பாலசிங்கம் இலண்டனில்சந்திப்பு

### யுத்தநிறுத்தம் தொடரும்?

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் நேற்றுக்காலை லண்டனில் சந்தித்துப் பேசியுள்ளார்.

சுமார் இரண்டரை மணித்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## முல்லைக் கடலில் உயிரிழந்த புலிகள்

கடற்படையினரின் அதிவேக டோறாப்படகு மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்த புலிகளின் பெயர் விபரம் வருமாறு.

★ மேஜர் தென்றல்
[விநாயகம் மகேந்திரன்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி லண்டனில் பிளேயரை சந்திப்பார்

(லண்டன்)

ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு பிரிட்டன் சென்றுள்ளார்:

பிரிட்டனில் அவர் பிரதமர் ரொனிபிளேயர் உட்பட பல முக்கிய அரசியல் தலைவர்களை இன்று சந்தித்துப் பேச்சு நடாத்துவார்.

விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடைசெய்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி பிரிட்டனுக்கு விஜயம் செய்வது இது

→ 8ஆம் பக்கம் பார்க்க

## சமாதான பேச்சு தேவையாயின் இந்தியாவையும் அழைப்பேன்

### ஜேர்மன் சஞ்சிகைக்கு ஜனாதிபதி பேட்டி

(லண்டன்)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிச் சமாதானப் பேச்சுவார்த்தை இரு மாதத்துக்குள் நடைபெறும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜேர்மனில் வெளிவரும்'பியுப்பிள்' எனும் சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் ஜேர்மனி சென்றிருந்த ஜனாதிபதி பியுப்பிள் சஞ்சிகைக்கு பேட்டி அளித்தார். அப் பேட்டியில் அவர் மேலும்தெரிவித்திருப்பதாவது;

இரு தரப்பும் நேரடியாகப் பேசுவதற்குரிய இணக்க முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நோர்வேயின் முயற்சியுடன் நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகளை இந்தியாவும் ஆதரிக்கின்றது.

பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்க அவசியம் ஏற்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## மிதிவெடி அகற்றிய பின் மீளக் குடியமர அனுமதி

### கட்டளை அதிகாரி அறிவிப்பு

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சிப் பகுதியில் மிதிவெடிகள் மற்றும் பொறிவெடிகள் முழுமையாக அகற்றப்பட்டதாக இராணுவப் பொறியியலாளர்கள் அறிவித்த பின்னரே அப்பகுதியில் பொதுமக்கள் மீளக் குடியமர்வதற்கும்பொருட்கள்உடமைகளை எடுப்பதற்கு இராணுவத்தினர் உதவுவர்.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## வண்ணை-சிகிச்சை நிலையம் தாய்மார் எவரும்செல்லவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ் வண்ணார் பண்ணை நாச்சிமார்கோவிலடிசிகிச்சை நிலையத்தில்நேற்றுதாய்மார் எவரும் செல்ல வில்லையென தெரியவருகிறது. வைத்திய கலாநிதி தெய்வேந்திரனும், குடும்பநலசேவையாளர்களும் சிகிச்சை வழங்குவதைத்தடை செய்யும் நோக்கில் சிகிச்சை நிலையங்கள்பூட்டப்பட்டிருந்தது. நாச்சிமார் கோவிலடிக் சிகிச்சை நிலையத்திற்கு டாக்டர் கே பிரதீபன் சென்று நீண்ட நேரம் காத்திருந்த போதிலும் தாய்மார் எவரும் செல்லவில்லையெனத் தெரி

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கைக்குண்டு மீட்பு

(கொழும்பு)

மகாரம்பைக் குளம் பகுதியில் கைவிடப்பட்டிருந்த வீடொன்றில் இருந்து கடந்த 18ஆம் திகதி ஒரு கைக்குண்டினை படையினர் கைப்பற்றியிருப்பதாகவிசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

(உ-9)

## நாளை தேர்

(ஊர்காவற்றுறை)

காரைநகர் மணற்காடு அருள்மிகு முத்துமாரிஅம்பாள் தேவஸ்தான தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை 10.00 மணிக்கும் மறுநாள் 10.00 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. (உ-75)

### சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் மேற்கு செட்டி வீதி அருள்மிகு ஆதிசிவ முத்துமாரியம்பாள் ஆலய சங்காபிஷேகம் வரும் மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு ப 8.45 மணியளவில் இடம்பெறவுள்ளது.(உ-2)

### இறந்தவரின்---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இருதயம் துடித்துக் கொண்டிருக்கும் போதே இம் மாற்றுச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-9)

### ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலர் அமரர் மகாலிங்கத்தின் மறைவினால் பிற்போடப்பட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம், பிரதேச விவசாய குழுக்கூட்டம் என்பன இன்று பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-2)

## சர்வதேச ஆடைக் கண்காட்சி

(கொழும்பு)

வரும்மாதம் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை முதற் தடவையாக சர்வதேச ஆடைக் கண்காட்சி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கண்காட்சியில் இலங்கை இரண்டு விற்பனை மையங்களைக் கொண்டிருக்கும். (உ-9


விஞ்ஞானபீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
இலங்கை

## அறிவித்தல்

விஞ்ஞானபீடப் பரீட்சைகள் 02-04-2001ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும்.முன்னர் அறிவிக்கப்பட்டது போன்று 26-03-2001 ஆம் திகதி ஆரம்பமாகமாட்டாது. இப்பரீட்சைகளுக்கான கால அட்டவணை விஞ்ஞானபீட விளம்பரப் பலகைகளில் பார்வைக்கு இடப்பட்டுள்ளது.

(கி-1627)

பதிவாளர்


## தென்மராட்சி பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் சோபையிழந்த நிலையில்

(மந்துவில்)

தென்மராட்சிப்பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட விளையாட்டுப்போட்டிகள் சோபையிழந்த நிலையில் இடம்பெற்று வருகின்றன.

இடப்பெயர்வு காரணமாக இப்பாடசாலைகள் வெவ்வேறு இடங்களில் தற்காலிகமாக இயங்கி வருகின்ற காரணத்தினாலும்,

இப்பாடசாலை மாணவர்களில் பலர் வேறுபாடசாலைகளில் தமது கல்வியைத் தொடர்வதாலுமே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இதுதவிர, தற்காலிகமாக இயங்குகின்ற பாடசாலைகளின் அதிபர்கள் சிலர் மேற்படி விளையாட்டுப்போட்டிகளுக்கு ஒலிபெருக்கி பாவிப்பதற்குத் தடை விதித்திருப்பதாகவும் அறிய முடிகிறது.

(உ-39)

## விவசாயிகளுக்கு குறுகிய காலப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் விவசாயிகளுக்கான குறுகிய முழுநாள் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளதாய் யாழ்.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை தெரிவித்தார்.

விவசாயிகள் பயன் பெறும் வகையில் புதிய தொழில் நுட்பங்களையும் வேண்டிய தகவல்களையும் விவசாயிகளுக்கு வழங்கி விவசாய உற்பத்தியை பெருக்கும் திறன் கொண்டதாய் இப் பயிற்சி வகுப்புக்கள் அமையும் என அவர்மேலும் தெரிவித்தார்.

மேற்படி பயிற்சி நெறியில் பங்கு கொள்ள விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதியிலுள்ள விவசாயப் போதனாசிரியரிடம் தொடர்பு கொண்டு வரவினை உறுதி செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

## கால்நடை வளர்ப்போர் சங்க மாதாந்தக் கூட்டம்

[மண்டைதீவு]

தீவக கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை தலைவர் பிரசன்னா தலைமையில் இடம் பெறவுள்ளது.

வேலணைகால்நடை வைத்திய அலுவலகத்தில் இடம் பெறவுள்ள இக்கூட்டத்தில் கால்நடைகளால் வருமானத்தை அதிகரித்தல், சந்தைப்படுத்தல், கோழிக் குஞ்சு விநியோகம் என்பன சமபந்தமாக கலந்துரையாடலும் இடம் பெறுவதுடன் தீர்மானங்களும் நிறைவேற்றப்படவுள்ளதாக கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

அன்றையதினம், கால்நடை வளர்ப்பாளர்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (உ-11)

## தாய்லாந்து அதிகாரிகள் மறுப்பு

[(கொழும்பு)

தாய்லாந்தில் விடுதலைப் புலிகளின் தளங்கள் எதுவும் இல்லையென அந் நாட்டின் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளதாக சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளதை தாய்லாந்து அதிகாரிகள் மறுத்துள்ளார்கள்.

(உ-9)

## "பவன" இன்று ஆரம்பம்

(கொழும்பு)

'பவன' என்ற பெயரிலான புதிய சேவை ஒன்றை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இன்று அறிமுகம் செய்யவுள்ளது.

சிங்கள மொழியிலான இச் சேவையானது 24 மணித்தியாலமும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 9.00 மணிக்கு இவ் ஒலிபரப்புச் சேவை, அமைசச்ர் மங்கள சமரவீரவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (உ-9)

## பயண அனுமதி வழங்கப் பட்டோர் விபரம்

மார்ச் மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயல. ரீதியாகத் தரப்படுகின்றதுக

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 173656 ஏ | 175334 ஏ |
| 175334 பி | 180182 ஏ |
| 181771 ஏ | 181805 ஏ |
| 181805 பி | 185805 சி |
| 181865 ஏ | 184545 ஏ |
| 184560 ஏ | 184636 ஏ |
| 184636 பி | 184636 சி |
| 184636 டி | 184693 ஏ |
| 184693 பி | 184693 சி |
| 184765 ஏ | 185869 ஏ |
| 185963 ஏ | 185978 ஏ |
| 185981 ஏ | 185981 பி |
| 186002 ஏ | 186010 ஏ |
| 186054 ஏ | 186054 பி |
| 186133 ஏ | 186133 பி |
| 186134 ஏ | 186252 ஏ |
| 186265 ஏ | 181240 ஏ |
| 187240 பி | 187240 சி |
| 187240 டி | 187240 ஈ |
| 187240எப் | 188809 ஏ |
| 188832 ஏ | 188878 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 185947 ஏ | 188831 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 178458 ஏ | 177458 பி |
| 177457 சி | 177458 டி |
| 180252 ஏ | 180254 ஏ |
| 181850 ஏ | 181927 ஏ |
| 181927 பி | 181927 சி |
| 181627 டி | 184481 ஏ |
| 184481 பி | 184718 ஏ |
| 184718 பி | 184788 ஏ |
| 185914 ஏ | 185921 ஏ |
| 185921 பி | 185921 சி |
| 175421 டி | 186046 ஏ |

| | |
|---|---|
| 186196 ஏ | 186300 ஏ |
| 086300 பி | 186305 ஏ |
| 186317 ஏ | |

மார்ச் மாதம் 21ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றது.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 180078 ஏ | 180078 பி |
| 184566 ஏ | 184566 பி |
| 184613 ஏ | 184613 பி |
| 184613 சி | 184725 ஏ |
| 184725 பி | 184725 சி |
| 184725 டி | 184725 ஈ |
| 184725 எப் | 185859 ஏ |
| 185859 பி | 185859 சி |
| 185859 டி | 185892 ஏ |
| 185898 ஏ | 185898 பி |
| 185917 ஏ | 185974 ஏ |
| 185979 ஏ | 185979 பி |
| 185999 ஏ | 185999 பி |
| 186110 ஏ | 186182 ஏ |
| 186182 பி | 186223 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 182190 ஏ | 182190 பி |

### இலட்சார்ச்சனை

(சங்கானை)

சுழிபுரம் பறாளை அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலட்சார்ச்சனைஆரம்பமாகி தொடர்ந்து ஆறு நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

(செ-124)


# கேள்வி அறிவித்தல்

## நல்லூர் பிரதேச சபை-அலங்கார வளைவு அமைத்தல்

01. மேற்குறிப்பிட்ட வேலைக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபைத் தலைவரால் நியமிக்கப்பட்ட கேள்விச்சபையினரால் 2001ம் ஆண்டு மார்ச் மாதம் 26ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணி வரை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் கிடைத்த கேள்விகள் அன்றையதினம் பி.ப 2.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.

02. நிர்மானப்பயிற்சி நிறுவனத்தில் இக்ராட்[ICTAD] கட்டடங்கள் நிர்மானிப்பதற்கு தரம் எம்-9 அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் மட்டும் தகுதியுடையவர் ஆவார்.அவர்களின் பதிவுப்புத்தகமும் நிதி நிலைமைகளும் நல்லூர் பிரதேச சபை செயலாளரினால் பரிசீலிக்கப்பட்டு தகுதியுடையவர்களுக்கே கேள்விப்பத்திரம் வழங்கப்படும்.

03 தகுதியுடையோர் மட்டும் பின்வரும் விபரப்படி பணம் செலுத்தி நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் கேள்விப்பத்திரத்தை 2001ம் ஆண்டு மார்ச் மாதம் 19ம் திகதி முதல் மார்ச் மாதம் 23ம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளளாம்.

04.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் [ப.சே.வரி.உடன்] |
|---|---|---|
| 01. இரு அலங்கார வளைவுகள் அமைத்தல் | 4000/- | 562.50 |

05. கேள்விப்பத்திரங்கள் யாவும் இருபிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப் பிரதியையும் இணைப்பிரதியையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு சீல் வைத்த கடித உறைகளில் இடதுபுற மேல் பக்கத்திலே வேலையின் விபரம் எழுதப்படல் வேண்டும். ஒரு பிரதியை தலைவர், நல்லூர் பிரதேசசபை என விலாசமிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும். அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியில் போட வேண்டும். மறு பிரதியை பி/உ.உ.ஆணையாளர், பி/உ.உ.ஆணையாளர்-அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

06 கேள்விப்பத்திரங்களில் பொருட்கள் சேவைகள்வரி [ஜீ.எஸ்.ரி] சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பொருட்கள் சேவைகள் வரி [ஜீ.எஸ்.ரி] சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விச்சபையின் முடிவே இறுதியானது ஆகும்.

07. கேள்வி ஆவணங்களை இலவசமாக பார்வையிடுவதுடன் மேலதிக விபரங்களையும் நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க.மணிபல்லவராஜன்(ஜே.பி.யூ.எம்),
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

தலைமைச் செயலகம்,
நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.

[கி/1630]

**மறைந்தார் மாண்பு**

# யோகர் சுவாமிகளின் அருள்மொழி கேட்டு

# அடியவராகினார் ஆசிரியர் சி.விசுவலிங்கம்

இந்து சமுத்திரத்தின் முத்தெனத் திகழும் இலங்கைத் தீவில் சந்ததம் இறை மணம் கமழும் சிவபூமி யாழ்ப்பாணம். சித்தத்தை சிவன்பால் வைத்த சித்தர்களான கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் என்போர் தமது அருளாட்சியை யாழ்ப்பாணப் பட்டினத்திலும் அதை அண்டிய சில கிராமங்களிலும் நடத்திவந்தார்கள். அப்படிப்பட்ட கிராமங்களில் ஒன்றான கைதடிப் பதியில் பிறந்து யோகர் சுவாமிகளினது அருட் கடாட்சத்தைப் பெற்று உய்ந்த பெருந்தகையே 'கைதடியூர் சின்னத்தம்பி விசுவநாதர் என்னும் விசுவலிங்கம் ஆசிரியராவார்.

## உரையாடும் ஒலிகேட்டார்

கைதடி மணியகாரர் பகுதியில் பிறந்த விசுவலிங்கம் தாம் இளைஞனாக யாழ். இந்துக் கல்லூரியில் படிக்கும் போது ஒரு அரிய அனுபவத்தைப் பெற்றார். அவரது தூய கணித ஆசிரியர் தெரு வீதியில் போகும் ஒருவருடன் உரையாடும் ஒலியைக் கேட்டார். அப்பொழுது இவர் யன்னல் வழியாக எட்டிப் பார்த்த போது ஆசிரியர் ஒருவரைக் கும்பிடுவதைப் பார்த்தார். தூய கணித ஆசிரியர் வகுப்பறைக்கு வந்தவுடன் ஆர்வம் மேலிட்டால் இளைஞர் விசுவநாதர் இச் சம்பவத்தை ஆசிரியரிடம் கேட்டபோது, தாம்கும்பிட்டவர்தான் யோகர் சுவாமிகள் எனக்கூறினார்.

## முழுக்கட்டையாகிறாய்

யோகர் சுவாமிகளைதரிசிக்க வேண்டும். என ஆர்வம் மேலிட இளைஞர் விசுவநாதர் சுவாமிகளைத் தேடி அங்குமிங்குமாக அலைந்தார். கடைசியில் அரியாலைச் சித்தி விநாயகர் ஆலயத்தில் மகா சிவராத்திரி அன்று யோகர் சுவாமிகளின் தரிசனத்தைப் பெற்றார். அப்பொழுது யோகர் சுவாமிகள் விசுவநாதரை நோக்கி 'தம்பி உன் வீடு இங்கிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது' என வினாவினார். அதற்கு இளைஞர் விசுவலிங்கம் '$3\frac{3}{4}$ கட்டை இருக்கும்' எனக் கூறினார். அப்பொழுது விசுவநாதரைப் பார்த்து யோகர் சுவாமிகள் 'நீ ஒரு முழுக் கட்டையாகிறாய்' எனக் கூறினார். அப்போது இளைஞர் விசுவநாதருக்கு இந்தக் கருத்து விளங்கவில்லை. பிறகு தான் அதன் சூட்சுமம் விளங்கியது ஆசிரியர் விசுவநாதரின் வாழ்வு பிரம்மச்சரிய வாழ்வாகவும் துறவு வாழ்வாகவும் அமைந்தது.

## ஆசிரியரானார்

யோகர் சுவாமிகளை அடிக்கடி சந்தித்து அவரது தரிசனத்தைப் பெற்ற இளைஞர் விசுவநாதர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை மேற்கொண்டார். ஆயினும் அவருக்கேற்பட்ட சுகயீனம் காரணமாக சிறிது காலத்தில் பல்கலைக்கழக படிப்பை இடையில் கைவிடநேர்ந்தது. ஆயினும் தமது படிப்பை மகரகம ஆசிரியர் கலாசாலையில் மேற்கொண்டு பயிற்றப்பட்ட ஆசிரியரானார். தமது ஆசிரியப் பணியை வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் மேற்கொண்ட போது யோகர் சுவாமிகளின் கட்டளைப்படி சிவதொண்டன் நிலையக் கட்டடப்பணிகளுக்கு ஒத்தாசையாகச் சிவதொண்டர் நிலையத்தில் தங்கினார். சிவதொண்டன் நிலையத்தை உருவாக்குவதில் தமது உடல் பொருள் ஆவியை அர்ப்பணித்தார். சிவதொண்டன் நிலையத்தை உருவாக்குவதில் தாமும் ஒரு அடியாராகப் பணிபுரிந்தது தமது வாழ்வின் பெரும் பேறாகக்கருதினார். மேலும் சிவதொண்டன் நிலைய முதல் பொருளாளராக இருந்து சிவதொண்டர் மலரை குருவின் ஆசியுடன் வெளியிட்டார் சிவதொண் ... வெளி ... மின்றி கடந்த70ஆண்டுகளாக வெளிவருவது யாவரும் அறிவர்.

## மார்க்கண்டு சுவாமிகள்

மேலும் இவரது வீட்டுக் காணியில் இருந்த குடிசை ஆச்சிரமத்தில் யோகர் சுவாமிகள் தமது அணுக்கத் தொண்டனார் மார்க்கண்டு சுவாமிகளை துறவு வாழ்வு மேற்கொள்வதற்காக தங்க வைத்தார். அப்போதுயோகர் சுவாமிகள் 'விசுவலிங்கம் உனக்குநான் ஒரு நல்ல சிநேகிதனைத் தருகின்றேன். அவன் போகும் போது உங்களுக்கு எல்லாவற்றையும்தந்து விட்டுப்போவான் என்று கூறினார். யோகர் சுவாமிகளால் கைதடியிலுள்ள ஆச்சிரமத்தில் 1950 ஆம் ஆண்டு இருத்தப் பெற்றமார்க்கண்டு சுவாமிகள் தாம் சமாதியான 1984ம் ஆண்டுவரை இங்கேயே வாழ்ந்து குருநாதனின் அருள் மொழிகளையும், நற்சிந்தனைகளையும் அடியார்களுக்கு வாரிவழங்கினார். மார்க்கண்டு சுவாமிகள தங்கியிருந்தஇந்த ஆச்சிரமத்திற்குயோகர் சுவாமிகள் அடிக்கடி வருவார்கள். சோல்பரி பிரபுவின் மகன் இங்கிலாந்திலிருந்து வந்தபோது யோகர் சுவாமிகள் அவரை சில வருடங்கள் மார்க்கண்டு சுவாமிகளுடன் தங்க வைத்தார் இதத்வ சிரேஷ்டர்கள் தங்கியிருந்த போது விசுவலிங்கம் ஆசிரியர் அவர்களுக்குத்தேவையான பணிவிடைகளைச் செய்து மனம் மகிழ்ந்தார்.

## பிரமச்சரியம்

விசுவலிங்கம ஆசிரியரின் தந்தையார் சின்னத்தம்பியிடம் ஒருமுறை யோகர் சுவாமிகள் 'சின்னத்தம்பி விசுவலிங்கம் சிவதொண்டு செய்ய வேண்டி இருக்கிறது. அவனை என்னுடன் விடு' என்றார். சுவாமிகள் கட்டளைப்படி விசுவலிங்கம் பிரம்மச்சாரிய விரதத்தை மேற்கொண்டு வாழ்ந்தார். யோகர் சுவாமிகள் ஒரு நாள் விசுவலிங்கத்திற்கு தாம் பாவிக்கும் ஒரு குடையை வழங்கி ஆசிர்வதித்தார். அக்குடை இன்றும் சிவதொண்டன் நிலையத்தில் திருவடியின் கீழ் பட்டுச் சிலையால் போர்த்தப்பட்டு பேணப்படுகின்றது.

விசுவலிங்கம் ஆசிரியர் தன் வாழ்நாளில் பெரும்பகுதியை சிவதொண்டிற்கே செலவழித்தார். கைதடியில் பெரும் செல்வந்தக் குடியில் தனி ஒரு பிள்ளையாக இருந்த போதும் அவர் ஒரு நாளகூட ஆடம்பர வாழ்க்கையை விரும்பவில்லை. தமது செல்வத்தின் பெரும்பகுதியை ஏழை எளியவர்க்குத் தானம் செய்தார். மேலும் ஆலயங்களைப் பராமரித்தும் சிவாச்சாரியர்களைப் போற்றியும் தமது இறுதிக் காலங்களைக் கழித்தார் கைதடியில் இருந்து இடம் பெயர்ந்தபோது இவரது உறவினர்கள் இவரை கொழும்பிற்கு வருமாறு எத்தனையோ முறை அழைத்தும் அவர் அதற்கு இணங்கவில்லை.

## சிவதொண்டனில் பரிபூரணமடைந்தார்

சிவதொண்டனில் நிகழும் யாகம் திருவடிபூசை எனபவற்றில் தம் உடல் நலம் குன்றியபோதும் தவறாது கலந்து வந்தார். அங்குவரும் அடியவர்களுடன் யோகர் சுவாமிகளுடனான தனது தொடர்புகளைக் கூறி இன்புறுவார் இறுதியாகக்கடந்த டிசெம்பர் மாத யாக பூசைக்கு வந்து வழமைபோல எல்லோருடனும் நல்லுரை பேசி மகிழ்ந்தார். 'எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்' என்ற யோகர் சுவாமிகளின் மகா வாக்கியத்திற் கேற்ப அடுத்த நாள் காலை சிவதொண்டனில் திருவடி பூசை நிகழும் நேரத்தில் தானும் ஒரு தொண்டனாக உருவாக்கிய சிவதொண்டன் நிலையத்திலேயே குருநாதன் திருவடிகளைப்பற்றி தமது வாழ்வை பரிபூரணமாக்கினார்.

**எஸ்.பரமசாமி**
(இணுவில்)

# இராசி பலன்

22 03 2001
(பங்குனி 9, வியாழன்)
திரயோதசி பி.இ 4 26 வரை
அவிட்டம் பி.ப 12 45 வரை
ராகுகாலம் 1.47- 3 17
சுபநேரம் 7 47- 9 17
பிரதோச விரதம்.

**மேடம்**
நினைத்தகாரியம்கைகூடும், தனலாபம், நண்பர்கள் சந்திப்பு, கௌரவம்.

**இடபம்**
தொழில்நன்மை, மேன்மை, நல்ல செய்தி, முயற்சி கைகூடும்.

**மிதுனம்**
புதியதிட்டம், அச்சநிலை, பிரயாணம், கட்டுப்படுதல்.

**கடகம்**
எதிர்பாராத பிரச்சினை, ஆரோக்கியக் குறைவு. பிரயாண பயம், கடன்பிணக்கு.

**சிங்கம்**
விருந்துபசாரம், பிரயாணம், கௌரவம், அபூர்வ சந்திப்பு.

**கன்னி**
முயற்சி கைகூடும், தனவரவு, பகைவர் விலகுவர், கௌரவம்.

**துலாம்**
தாழ்வு நிலை. வியாபார மேன்மை, காரிய தாமதம், குடும்பக் கவலை.

**விருச்சிகம்**
ரோகம உறவினர் மனஸ்தாபம், மனக்கிலேசம், காரிய தாமதம்.

**தனுசு**
பிரயாணம், வாக்கு மேன்மை, அந்நியர் சந்திப்பு, சகோதரர் உதவி

**மகரம்**
பக்குப்பகை, பொருள் விரயம், முயற்சி தாமதம், கௌரவக் குறைவு

**கும்பம்**
தெய்வ சிந்தை, பெரியோர் ஆசி, நண்பர்கள் உதவி, காரிய ஜெயம்.

**மீனம்**
உஷ்ணரோகம், சுபசெலவு, பிரயாணம், காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# தீவககல்விவலயஉடற்பயிற்சி போட்டி முடிவுகள்

(ஊர்காவற்றுறை)

தீவக வலயப் பாடசாலை மாணவர்களுக் கிடையிலான உடற்பயிற்சிப்போட்டிகடந்த திங்கட்கிழமை யா/ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் தீவகவலய கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் எ ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் போட்டிப் பணிப்பாளரும் உடற்கல்விஆசிரியஆலோசகருமான எஸ்.என். லோகநாதன் நெறிப்படுத்தலில் இடம் பெற்றது.

ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு கல்விக் கோட்ட மட்டப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட அணிகள் இப்போட்டியில் பங்கு கொண்டன.

19 வயது ஆண்கள் பிரிவில் யா/ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி முதலாம் இடத்தினையும், யா/நயினாதீவு சிறி கணேசா கனிஷ்ட மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தினையும், யா/ காரைநகர் கலா நிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் மூன்றாவது இடத்தினையும் 19 வயது பெண்கள் பிரிவில் யா/சரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயம் முதலாவது இடத்தினையும், யா/நாரந்தனை றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயம் இரண்டாவது இடத்தினையும், யா/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம் மூன்றாவது இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

இப் போட்டியில் வெற்றியீட்டிய அணிகள் மாவட்ட மட்ட உடற்பயிற்சிப் போட்டியில்கலந்துகொள்ள தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ- 75)

# நீதிமன்றில் நிறுத்துக

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ்கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச் சாலையில தடுத்து வைக்கப்பட்டிருந்த வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வராசா- சிவரூபன்என்ற இளைஞனை இம்மாதம் 24 ஆம் திகதி நீதவான் இ. விக்கினராஜா முன்னிலையில் நிறுத்துமாறு சட்டமா அதிபரால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (உ-6)

# இல. செஞ். சி. ச. யாழ் கிளை பிரிவுகளுக்கான தேர்தல் எதிர்வரும் மே மாதம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் பிரிவுகளுக்கிடையேயான தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுச் சபைக் கூட்டத்தில் இடம் பெறவுள்ளது.

இத் தேர்தலானது இச் சங்கத்தின் கீழ் இயங்கும் 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் பளைப் பிரிவிலும் நடைபெறவுள்ளதாகவும், எதிர்வரும் மே மாதம் 17 ஆம் திகதிக்கு முன் யாழ். கிளையில் கிடைக்கக் கூடியவாறு அங்கத்துவப் பணத்தைச் செலுத்தி துரித உறுப்பினர்களும் ஆயுள் உறுப்பினர்களுமே இத் தேர்தலில் வாக்களிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் தேர்தல் நடைபெறவுள்ள நேரம், இடம், காலம் என்பன பிரிவுச் செயலாளர்களுக்கு ஏப்ரல் 29 ஆம் திகதிக்கு முன் அறியத்தரப்படும் எனவும் மேலதிக விபரங்கள் பெறவிரும்பின் கிளைத் தலைமையகத்தில் தொடர்பு கொள்ளும்படியும் கௌரவ செயலாளர் அறிவித்துள்ளார். (உ-2)

# குடிசன மதிப்பீட்டுப் பணி குடா நாட்டில் மும்முரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டின் குடிசன மதிப்பீட்டுப்பணி துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

ஒவ்வொருகிராமஅலுவலர் பிரிவுகளிலும் குடிசன மதிப்பீட்டுக் குழுவினர் வீடு வீடாகச் சென்று விபரங்களைத் திரட்டி வருகின்றனர்.

மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டவீடுகளுக்குஉறுதிப்படுத்தல்ஸ்ரிக்கர் ஒட்டப்படுகிறது.

இக் கணிப்பீட்டிற்கு குடாநாட்டின் சகல மக்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறு கிராம அலுவலர் ஊடாக மேற்கொள்ளப்படும் இக் கணிப்பீட்டிற்கு உண்மையானதும் உறுதியானதுமான விபரத்தினை வழங்கி ஆதரவு வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

# தொழிற் பயிற்சித் திட்டம் 'வசந்தம்' விரைவில் அமுல்

(யாழ்ப்பாணம்)

தொழில் முயற்சியாளர்க்கு இயந்திரக் கலையுடன் இணைந்த தொழில் சார் பயிற்சியினை வழங்கும் ''வசந்தம்'' எனும் திட்டம் ஒன்று யா மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிகள் யா மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கைத்தொழில் நிறுவனங்களுக்குமான தொழில்சார் பயிற்சி நெறியாக கைத்தொழிலினை மேம்படுத்தும் வகையில் இடம்பெறும்.

கொழும்பில் இருந்து வரும் பயிற்றுவிப்பாளர்களால் பயிற்சிகள் வழங்கப்படும் உ-6

# தமிழ் பேசும் சமூகங்களின் ஐக்கியம் பேண மலையக சக்திகளுடன் ஒன்றிணைவோம்

## டக்ளஸ் தேவானந்தா உறுதிப்பாடு

(கொழும்பு)

மலையகத் தமிழ் மக்கள் எங்கள் சகோதர மக்கள் என்றபாசத்தாலும் தொழிலாளர்களாகிய அவர்களின் அடிப்படை நலன்களிலும்அரசியல் உரிமைகளிலும் எமக்குள்ள தார்மீக அக்கறையாலும், அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுடனான நெருங்கியநட்பின்காரணமாகவும் நானும் எனது கட்சியும் அவர்களது சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு பூரண ஆதரவளித்ததுடன் அதைப் பகிரங்கமாகத் தெரிவிக்கும் முகமாக சத்தியாக்கிரகத்திலும் நேரில் சென்று அமைச்சருடன் அடையாளமாகக் கலந்து கொண்டோம்.

அத்துடன் நில்லாது இதற்கான தீர்வை வலியுறுத்தி ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருந்தோமென்பதையும் இத்தருணத்தில் சுட்டிக்காட்டி மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் ஈட்டிக் கொடுத்த இவ் வெற்றியின் மகிழ்ச்சியிலும் பங்கெடுத்துக் கொள்கிறோம்.

தோட்டத் தொழிலாளர்களின் வேதன உயர்வுகோரிய 25 நாள் சத்தியாக்கிரகப் போராட்டத்தின்பூரண வெற்றிக்காகப் பாடுபட்ட அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அனுப்பி வைக்கப்பட்ட வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் வாழ்த்துச் செய்தியில் மேலும்;

இந்தப் போராட்டத்தின் மூலம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மலையகத் தமிழ் மக்களின் அடிப்படை நலன்கள் குறித்த தனது இயல்பான அக்கறையை வெளிப்படுத்தியுள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதோ, அல்லது அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டிருப்பதோ, மலையக மக்களின் அடிப்படை நலன்களுக்காகப் போராடுவதற்குப்பாதகமாக அமையப்போவதில்லை என்பதை எடுத்துக்காட்டி, இச் செல்வாக்குகள் யாவற்றையும் மலையக மக்களின் நலன்களுக்காகவே பயன்படுத்தவும் செய்துள்ளார்.

இப் போராட்டத்தை அமைச்சர்ஆறுமுகம்தொண்டமான் மிகுந்த பொறுமையுடனும், அர்ப்பணிப்புடனும், விடா முயற்சியுடனும், உறுதியுடனும் முன்னெடுத்ததோடு ஏனைய தோட்டத் தொழிற் சங்கங்களையும் அரசியல் வாதிகளையும் அரவணைத்துக்கொண்டு மலையகத் தொழிலாளர்களைப்பொறுப்புடன் வழிகாட்டியமை அவரது அரசியல் பக்குவத்தை புலப்படுத்துவதாகஅமைந்துள்ளது

தமிழ் பேசும் சமூகங்களின் ஐக்கியத்தைக் கட்டியெழுப்பி எதிர்காலத்தில் உறுதியாக ஒன்றிணைந்து செயற்படக்கூடிய முன்னெடுப்புகளை நாம் 'அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுடன் சேர்ந்து மேற் கொள்வோமென்பதையும் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## புலிகள்மீது தாக்குதல்

(கொழும்பு)

நாகர் கோவில்ப் பகுதியில் கடந்த 19 ஆம் திகதி விடுதலைப் புலிகள் மீது படையினர் நடத்திய தாக்குதலில் 5 விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என படையினர் நம்புவதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## தொடர்ந்தும் தடுப்புக்காவல்

(யாழ்ப்பாணம்)

கடந்த 23-12-2001 அன்று தனங்கிளப்பில் வைத்து பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி பின் காங்கேசன் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இளைஞரான தோமஸ் ராஜ்குமார் என்பவரை சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்கும் வரை தடுப்புக்காவலில் வைக்குமாறு நீதிவான் இ விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். [உ-6]

## 50 மூக்குக் கண்ணாடிகள் ரோகித்தா அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

கண்பார்வை குறைந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் யாழ். மாவட்ட மக்களுக்கு வழங்கவென கல்கத்தாவிலிருந்து அன்பளிப்புச் செய்யப்பட்ட 50 மூக்குக் கண்ணாடிகளை மாவட்ட ஆளுநர்லயன் ரோகித்தாஉடவத்தை லயன் பா. தவபாலனிடம் நேற்று முன்தினம் கையளித்தார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணக் கல்லூரி யாழ். கிளை நிறுவனத்தில் லயன்ஸ் கழக உறுப்பினர்களுக்கான வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட ஆளுநர் மேற்படி கண்ணாடிகளை வழங்கினார். (உ-15)

## பாடசாலை மாணவர்க்கு சத்துணவுத் திட்டம்

### விரைவில் அமுல்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

ஊட்டச் சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ள யாழ் மாவட்ட மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டமொன்றினை துரிதமாக மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சுமார் 4 ஆயிரத்து 720 பாடசாலை மாணவர்கள் இடம்பெயர்ந்தோர் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் குடும்ப வறுமை காரணமாக ஊட்டச்சத்துக் குறைவினால் உடல் நிலை பாதிக்கப்பட்டு பாடசாலை செல்வதில்லை.

இது குறித்து அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா ஜனாதிபதியிடம் நகல்த்திட்டமொன்றை சமர்ப்பித்திருந்தார்.

ஜனாதிபதி இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளதையடுத்து அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா சத்துணவு வழங்கும் திட்டத்தினை துரிதமாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்குப் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

## வீதிகள் புதுப்பொலிவு

(சங்கானை)

வட்டுக்கோட்டைப் பகுதியில் பல சிறிய வீதிகள் தற்போது சிறந்த முறையில் செப்பனிடப்பட்டுள்ளன.

முன்னர் குச்சொழுங்கைகளாய் மக்களுக்கு பிரயாண சிரமங்களை ஏற்படுத்திய இவ்விடங்கள் தற்போது பொலிவு பெற்று விளங்குகின்றது வட்டு சிவன்கோவில் மற்றும் கண்ணகை அம்மன் ஆலயங்களை அண்டிய பகுதிகளில் இவ்வாறு வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளன. (-124)

## காணாமற் போன தாலிக் கொடி பல நாட்களின் பின் மீட்பு

(மந்துவில்)

வீட்டில் வைத்தவேளை காணாமற் போன தாலிக் கொடி சில வாரங்களின் பின் வீட்டிற்கு அருகாக உள்ள வெறும்காணி ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

துன்னாலை கிழக்குப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது

இரு சிறுவர்களே இத்தாலிக் கொடியைமீட்டெடுத்துக் கொடுத்ததாகவும், அவர்களது செயலைப்பாராட்டி சன்மானம் வழங்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, வீட்டில் இருந்து களவுபோன தாலிக்கொடி, வெறும் காணிக்கு எவ்வாறு வந்தது என்பது மர்மமாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-39)

## பொதுக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கான பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் 24 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 11 மணிக்கு யா/பல்கலைக்கழக வணிகத்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [உ-6]

## உரும்பிராயில் பஸ் தரிப்பிடம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பொஸ்கா லேன் அருகில் 65ஆயிரம்ரூபா செலவில் அமைக்கப்பட்ட பஸ் தரிப்பிடம் கடந்த 19 ஆம் திகதி பி.ப ஒரு மணிக்கு மாவட்ட ஆளுநர் லயன்ஸ் ரோகித்த உடவத்தவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில்வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் ஏ.எவ். சொக்கலிங்கம் கலந்து கொண்டார்.

மேற்படி பஸ்தரிப்பிடம் அமைப்பதற்கான 65 ஆயிரம் ரூபா பணம் காலம் சென்ற சுப்பிரமணியம் அவர்கள் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

## மருதடி விநாயகர் உற்சவம்

(சங்கானை)

மானிப்பாய்- மருதடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பதினெட்டுநாட்கள் திருவிழா நடைபெற்று அடுத்த மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாநடைபெறவுள்ளது. (செ-124)

## இளைஞன்வீடு திரும்பவில்லை

[யாழ்ப்பாணம்]

கடந்தவருடம் 20/10/2000 அன்று மாலை வீட்டிலிருந்து புறப்பட்ட சிவகுரு சுகந்தன் (வயது-26) என்ற குடத்தனை கிழக்கைச்சேர்ந்த இளைஞன் இன்று வரையில் வீடு திரும்பவில்லை என உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-10)

## சேவைக்கால பயிற்சி

(மந்துவில்)

தரம் 10, 11 க்கு விவசாய விஞ்ஞானம் போதிக்கும் தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்க்குவரும்சனி ஞாயிறு தினங்களில் சேவைக் காலப் பயிற்சி வகுப்பு நடைபெறவிருப்பதாகத்தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (உ-39)

## காணாமற் போனோர் தொடர்பான விசாரணை உறவினர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் சம்பந்தமாக விசாரணைகளை மேற் கொண்டு வரும்விஷேட புலனாய்வுப் பொலிஸார் மேலும் 6 பேர் சம்பந்தமான விசாரணைகளுக்காக அவர்களுடைய உறவினர்களையும் தொடர்புடைய சாட்சிகளையும் வரவழைத்துள்ளனர்.

அவர்களது விபரம் வருமாறு;

செல்வராஜா பிரதீபன் 56, ஆனைகாட்டி ஒழுங்கை அரியாலை (காணாமற்போனவர்) விசாரணைக்கு அழைக்கப்பட்டோர் - கதிரவேலு செல்வராஜா இவரது மகன்.

சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்- 1126 செல்வநாயகபுரம் அச்சுவேலி (காணாமற் போனவர்) விசாரணைக்கு அழைக்கப்பட்டோர் - சுப்பிரமணியம் தங்கப்பிள்ளை, நாகேஸ்வரன் ராகினிதேவி, மாணிக்கம் நாகேஸ்வரன்.

துரைசிங்கம் குணசேகரம்- 138, கொட்டடி வீதி குருநகர் (காணாமற போனவர்) விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்- டக்ளஸ் பிரான்சிஸ்கா,

நவரட்ணம் குமார் விளையாட்டரங்க வீதி கோப்பாய் தெற்கு (காணாமற் போனவர்) விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்- இராஜேஸ்வரி நவரட்ணம்,

நடராஜா விநாயகமூர்த்தி முள்ளையடி பளை (காணாமற்போனவர்)விசாரணைக்கு அழைக்கப்பட்டார்- விநாயகமூர்த்தி சுசீலா, இராசரத்தினம் ஆகியோரை யா/ பொலிஸ் நிலையத்திற்கும்,

1996-07-20 அன்றுகோண்டாவில் டிப்போ பகுதியில் கடைத்திறப்பு விழா ஒன்றின் போது கைதாகி காணாமற் போன மூவரில் ஒருவரான வீரசிங்கம் பாலேந்திரன் என்பவர் தொடர்பான விசாரணைக்காக அவர் சம்பந்தப்பட்டவர்களை சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கும் வருமாறு அழைத்துள்ளார். (உ-2-10)

## திருவடிநிலை இந்து மயானத்தில் சிரமங்களின்றி ஈமக்கிரியைகள் நிறைவேற்ற அனுமதி பெற்று தருக

### வலிமேற்கு மக்கள் கோரிக்கை

(சங்கானை)

பொன்னாலை - திருவடி நிலை இந்து மயானத்தில் ஈமக்கிரியைகளைதடையின்றி மேற்கொள்ள அனுமதி பெற்றுத்தரும்படி வலி. மேற்குப் பகுதி மக்கள் வடபகுதி புனரமைப்பு மற்றும் வடகிழக்கு தமிழ், இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரியுள்ளனர்.

அண்மையில் வலி. மேற்கு பிரதேச சபையில் - சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் தலைமையில் நடைபெற்ற சனசமூக நிலைய ஒன்றியக் கூட்டத்தில் இது பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டு அவரூடாக அமைச்சருக்கு கடித மூலம் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது:

இதேவேளை, திருவடி நிலை இந்து மயானத்தில் இறுதிக் கிரியைகள் மேற்கொள்வதில் நீண்டகாலமாக சிரமம் இருந்து வருவதும், அங்கு செல்ல சொற்பமானவருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது: (உ-124)

## இன்று ஒரு தகவல்

### ஆற்றுப்படுத்துவதே ஆசை!

வாழ்க்கையில் ஆசை என்பது அர்த்தமுள்ளதாக உள்ள வரை ஒருவனின் வாழ்வும் ஆற்றுப்படுவது உண்மை. ஆசை என்பது எரிபொருள். வாழ்க்கையை வளத்துடன் இயக்கும் சக்தி அதனிடம் தான் உள்ளது. இந்தப் பூமிக்குக் கூட ஈர்ப்பென்ற ஆசை இல்லாது போனால் இங்குள்ள ஒவ்வொன்றும் இப்போ எங்கெங்கோ பயணப்பட்டிருக்கும் பூமியின் மீது வானத்திற்கு மழை என்றபூச்சொரிய ஆசை வந்திராவிட்டால் இங்கே எல்லாமே எரிந்து போயிருக்கும். மண்ணைக் கிழித்த விதை மரமாகி வானத்தை நோக்கி பயணப்படுவது போல ஒருவனின் வாழ்வு உன்னதத்தை நோக்கிச் செல்ல உந்துகின்ற சக்தியே ஆசை.

ஆனால் இதனைவரையறைகளுக்குள்ளேயே வளர்த்துக் கொள்ள வேண்டும். வட்டாரி ஒன்று தன்னிலும் விட நீளமான விட்டத்தை உடைய வட்டம் வரைய ஆசைப்படக் கூடாது. பூக்களைப் பூக்கும் பூமரங்கள் நெருப்பை பூக்க ஆசைப்படுவது ஆதாயம் ஆகாது இந்தப் பூமியைப் போல வரையறைகளை வகுத்துக் கொண்டு தான் வட்டம் போட வேண்டும். எமது ஆசைகளும் நியாயமானவையாக உன்னதத்தை அடைய வழி செய்பவைகளாக இருந்து விட்டால் உபத்திரவம் ஒரு போதும் வந்து சேராது. மழையில் நனையும்போது குடைக்கு ஆசைப்படுவது குற்றமாகதே?

எனவே ஆசைகள் எல்லாம் அறு என்பது அர்த்தமில்லாதது. பூமியில் உயிர்களை வைக்க ஆண்டவனுக்கு மட்டும் ஆசையில்லாது போனால் எல்லாம் கட்டாந்தரையாகவே இருந்திருக்கும். ஞானிக்குக் கூட முத்தி பெறவேண்டுமென்று ஆசை இருக்கிறதே! தவழும் மழலைக்கு தத்தித் தத்தி நடக்கஆசை எழுகிறதே அவை நியாயமான ஆசைகள். வளப்படுத்தும் ஆசைகளால் வாழ்க்கை ஒரு போதும்கெட்டுப் போவதில்லை. வைரக் கவிஞனின் வரிகளில் சொல்வதாயின் 'ஆசைகள் தப்பென்றால் வேதமில்லை. முனிவர்க்கும் இதுஒன்றும்பாவமில்லை. மனிதர்க்கு நிலையான சட்டமில்லை மாறுவதால் பூமிக்கு நட்டமில்லை!'

ரீ. ரீ. மயூரன்

# திக்கம் வடிசாலை செயலிழப்பு

# சீவல் தொழிலாளர் ஏமாற்றம்

(மந்திகை)

கடந்த சில தினங்களாக திக்கம் வடிசாலை இயங்காமையால் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் இருந்து கொண்டு செல்லப்படும் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போத்தல் கள்ளினைத் திருப்பி அனுப்பும் நிலை தோன்றியிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த சனியன்று திக்கம் வடிசாலை ஊழியரை இனம் தெரியாத ஆயுததாரிகள் துப்பாக்கி முனையில் பயமுறுத்தியதன் எதிரொலியாக ஊழியர்கள் தமது பணிகளைப் புறக்கணித்து வருவதனாலேயே இந்நிலை எழுந்துள்ளதாய் தெரியவந்துள்ளது.

மேற்படி கள் திருப்பி விடும் நடவடிக்கையால், சீவல் தொழிலாளர் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளதுடன், பெருமளவிலான கள் வீணே நிலத்தில் ஊற்றப்படும் நிலை உருவாகியிருப்பதாகவும் சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-23

## மிதிவெடி விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஏற்பாட்டில் இடம் பெற்று வரும்மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்குத் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு சென் ஜோசப் மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது. (உ)

## சான்றிதழ் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரியின் 1998ஆம் ஆண்டு முழுநேர, பகுதிநேர பாடநெறிகளின் இறுதிப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களுடைய சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றுள்ளதால் மாணவர் பதிவுப் புத்தகத்துடன் வந்து சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட மாணவர்களை கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (உ-6)

## உடுவில் பிரதேச செயலக தடகளவிளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலக தடகள விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வுகள் எதிர் வரும் 29 ஆம் 30 ஆம் திகதிகளில் உடுவில் பதில் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக வலி தெற்கு பிரதேச சபை தலைவர் கே.கமலசேகரன், உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஏ. தற்பரானந்தன் யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி ஏ. எவ். ஜே ரூபசிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (உ-2)

## பிரதேச செயலக ரீதியில் விளையாட்டு நிகழ்வு

### தே.இ.சே.ம. ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இளைஞர் சேவைகள் மன்றத்தினரால்விரைவில் நடத்தப்படவுள்ள பிரதேச செயலக ரீதியான விளையாட்டு நிகழ்வுகள் சம்பந்தமாக ஆராயும் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 4 30 மணிக்கு மல்லாகம் நாமகள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அனைத்து இளைஞர் கழகங்களிலும் இருந்தும் ஒவ்வொரு விளையாட்டுத்துறை பிரதிநிதியை இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இளைஞர் சேவை மன்ற உத்தியோகத்தர் சு. கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். (உ-6

## தந்தை ஓட்டிய லொறியில் சிக்கிய சிறுமி சிதறிப்பலி

(கொழும்பு)

மகளுக்கு தந்தையே காலனான பரிதாப சம்பவம் கொழும்பு எம்பிலிப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தந்தை ஓட்டிய லொறியில் சிக்குண்ட க. சுனிமதுசாந்தி (வயது 2½) என்ற சிறுமியே மேற்படி மரணமானவர் ஆவார்.

லொறிச் சாரதியான பிரஸ்தாப சிறுமியின் தந்தை லொறியைச் செலுத்திக் கொண்டிருந்த போது சிறுமி குறுக்கே ஓடியதனாலேயே மேற்படி மரணம் சம்பவித்துள்ளது (செ)

## பாடசாலைகளுக்கு உபகரணங்கள்கையளிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்.மாவட்டத்தில் உள்ள சில பாடசாலைகளுக்கு மனித முன்னேற்ற நிலையத்தின் பாசச்சோலை சிறுவர் இல்லத்திற்கும் சர்வதேச லயன்ஸ் கழகத்தால் வழங்கப்பட்ட 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை லயன்ஸ் கழக 306 பீ மாவட்ட ஆளுனர் ரோகித்த உடவத்த நேற்றுமுன் தினம் மனித முன்னேற்ற நிலையத்தில் வைத்து வழங்கினார்.

பாடசாலைகளுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும், பாசச்சோலைக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான படுக்கைவிரிப்பு, சில்வர் கப் பாத்திரங்கள்என் பனவும் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி பொருட்கள் வழங்கும் வைபவம் லயன்ஸ் செல்வராஜா தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாவட்டபாடசாலைகளான, சங்கானை சிவப்பிரகாசவித்தியாலயம், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, இடைக்காடு மகாவித்தியாலயம், சென்பற்றிக்ஸ்கல்லூரி கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் என்பனவற்றிற்கே விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (உ-2)

## விளையாட்டு உபகரணம் கையளிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் உள்ள விளையாட்டு கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றது.

அனலைதீவு, எழுவைதீவு, காரைநகர், ஊர்காவற்றுறைப் பகுதிகளில் உள்ள விளையாட்டு கழகப்பிரதிநிதிகளிடம் வைபவரீதியாக ஊர்காவற்றுறைப் பிரதேசசபைத் தலைவர் என். மதனராஜா இவற்றைக் கையளித்தார்.

திறமையாக இயங்கும் சில விளையாட்டுக் கழகங்களுக்கு முழுமையாக விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன. (உ-75)

## நீர்வேலியில் தொடரும் திருட்டுச் சம்பவங்கள்

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி தெற்கு மற்றும் கரந்தன் பகுதியில் இரு வீடுகளில் நட்டநடுநிசியில் தங்கச் சங்கிலிகள் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் வீட்டில் உளளோர் நித்திரையில் இருந்தவேளையில்இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பதிவாளர் விக்கினேஸ்வரனின் இல்லத்திலும், இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் இராஜையாவின் இல்லத்திலுமே திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளன

இப்பகுதியில் திருட்டு முயற்சிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதும், இது விடயம சம்பந்தமாக பலர் பொலிஸாரினால் தண்டிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [ரு]

## சட்டவிரோத மின் வயர் சபையினரால் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத மின்சாரம் பெற்று வந்தவர்களின் மின் வயர்கள் கைப்பற்றப்பட்டதுடன் சம்பந்தப்பட்டவர்கள் பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட சம்பவம் நீர்வேலியில் கடந்த 20ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

இப் பகுதியில் சட்டவிரோத மின்சாரம் பெறுபவர்கள் குறித்து இலங்கை மின்சார சபையினருக்கு புகார் செய்ததையடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நீண்ட காலமாக தொடரும் இச்சட்டவிரோத மின் பாவனையால் இப் பகுதி மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற பேக்கரி உரிமையாளர் சங்க வருடாந்த பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் சங்கத்தில் 2001ம் ஆண்டு நிர்வாக சபை உறுப்பினராக தேர்தலில் அமோக வெற்றி பெற்று தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட தலைவர்- சி. சுந்தரலிங்கம் (லிங்கம் பேக்கரி, நாவலர் வீதி) மாவட்ட உப தலைவர் - அ. கந்தையா (கண்ணியம் பேக்கரி, இருபாலை) மாவட்ட செயலாளர் - கு. காந்தரட்ணம் (ஜெயக்குமரன் பேக்கரி, மானிப்பாய்) மாவட்ட உப செயலாளர் - இ. குமாரசாமி (சுவர்ணா பேக்கரி, சுன்னாகம்) மாவட்ட பரிசோதகர்- இ. அமரசேனாபதி (சீவரட்ணம் பேக்கரி, வல்வெட்டித் துறை) (உ)

## கொடிகாமப் பகுதியில் சோதனை தீவிரம்

(மந்துவில்)

கொடிகாமம், வரணிப் பகுதிகளில் அண்மைய நாட்களாகசோதனை நடவடிக்கைகள், சுற்றிவளைப்புகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

திடீர் திடீரென புதிய தடுப்புக்கள ஏற்படுத்தப்படுவதுடன், வாகனங்கள், பொது மக்கள் மற்றும் அவர்கள் எடுத்துச் செல்லும் பொருட்கள் என்பனதீவிரசோதனைக் குட்படுத்தப்படுவதாக அறிய முடிகிறது. (உ 39)

## விவசாய செயலமர்வு சனியன்று பல்கலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடமும், யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து நடத்தும் விவசாயச் செயலமர்வு வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை9.00 மணிக்குயாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். குடாநாட்டுவிவசாயிகளின் தற்போதைய பிரச்சினைகள், அவற்றிற்கான தீர்வுகள் என்பவற்றை இனம் கண்டு அவற்றைத் தீர்ப்பது தொடர்பாக இக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது. (உ)

### உடுவில் பிரதேச செயலர் பிரிவில்

## சமுர்த்திசெயலணி அமைப்பு இம்மாதத்துடன் முடிவுறும்

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான சமுர்த்திச் செயலணி அமைப்புக் கூட்டங்கள் அனைத்தும் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்கப்படவுள்ளதாக சம்பந்தப்பட்டோர் தெரிவித்துள்ளனர்.

இதன்படி சங்குவேலி தெற்கு ஜே/187 கிராம அலுவலர் பிரிவிற்கான செயலணி அமைப்பு எதிர்வரும் 26 ஆம் திகதி வலய முகாமையாளர்திருமதி ஆ ஜெயக்குமார் தலைமையில் சங்குவேலி அரசினர் த.க.பாடசாலையில் பி.ப 3 மணிக்கும்,

உடுவில் தெனகிழக்கு ஜே/183 பிரிவிற்கான செயலணி அமைப்பு எதிர்வரும் 28 ஆம திகதி அண்ணா சசநிலைய மண்டபத்தில பி.ப 3 30 க்கும்,

குப்பிளான் தெற்கு ஜே/210 பிரிவிற்கான செயலணி அமைப்பு எதிர்வரும் 29 ஆம் திகதி வலயம 2 முகாமையாளர் செல்வி புஸ்பலோஜினி தலைமையில் குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் பி.ப 3.00 மணிக்கும் நடைபெறவுள்ளன. (உ-2)

# ரஷ்ய நாட்டு உளவுத் துறையுடன் சோனியா காந்திக்கு தொடர்பு

## இந்திய மத்திய அரசு குற்றச்சாட்டு

(புதுடில்லி)
சோனியா காந்திக்கும் ரஷ்ய உளவுப்படைக்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக இந்திய மத்திய அரசு குற்றஞ்சாட்டியுள்ளது. ராஜீவ்காந்தி பிரதமராக இருந்த பொழுது சோனியாவின் தாயாரும் சகோதரியும் விலைமதிக்க முடியாத இந்திய கலைச் செல்வங்களை எடுத்துச் சென்றுள்ளதாக அக்குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை சோனியா காந்தி ஓர் இத்தாலியர் என்ற வகையில் அவரது குடும்பத்திற்கும் முன்னாள் சோவியத் யூனியன் உளவுத் துறைக்கும் தொடர்புகள் இருந்த காரணத்தால் இது விடயம் தொடர்பாக இந்திய மத்திய அரசு விசாரணை தொடர இருப்பதாக அறிவித்துள்ளது.

இந்தத் தொடர்புகள் பற்றிய செய்திகள் ரஷ்ய மத்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு கிடைத்திருப்பதாக ஏற்கனவே செய்திகள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

தி.மு.க.வுக்கு ஆதரவு தெரிவித்த

# சிதம்பரத்தின் கொடும்பாவி சகதொண்டர்களால் எரிப்பு

(சென்னை)
த.மா.கா.வின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவரான ப. சிதம்பரத்தின் கொடும்பாவியை அக்கட்சியைச் சேர்ந்த தொண்டர்களே எரித்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

சிதம்பரம் த.மா.கா.வில் இருந்துகொண்டு அ.இ.அ.தி.மு.காவை எதிர்த்து கருத்துக்கூறுவதையும் எதிர்க்கட்சியான தி.மு.காவிற்கு ஆதரவு தெரிவிப்பதையும் ஆட்சேபித்தே த.மா.கா தொண்டர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

# நெரிசலில் சிக்கி யுவதிகள் உயிரிழப்பு

(ஜகார்த்தா)
ஜகார்த்தாவில் உள்ள சந்தைக் கட்டடத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 4 இந்தோனேஷிய யுவதிகள் பலியாகியுள்ளனர்.

பிரிட்டிஷ் இசைக் குழுவினர் பங்கு கொண்ட இவ் இசை நிகழ்ச்சியில் வாத்தியங்கள் இசைக்க ஆரம்பித்ததும் பெரும் நெரிசல் ஏற்பட்டதாகவும் அதில் சிக்கிய நான்கு யுவதிகளும் பரிதாபமான முறையில் உயிர் நீத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-9]

தன்னை எதிர்ப்பவர் மீது

# பொய் வழக்குகளை ஜோடித்து பழிவாங்குகிறாராம் கலைஞர்

## ஜெயலலிதா கருஞ்சீற்றம்

[சென்னை]
கருணாநிதி தன்னை எதிர்ப்பவர்கள்மீதும், தனக்கு ஆதரவு வழங்காதவர்கள் மீதும் பொய் வழக்குகளை ஜோடித்துப் பழிவாங்கலில் ஈடுபட்டுள்ளார் என்று அ.இ.அ.தி.மு.க பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தவகையில்தான் என் மீதும், எனது கட்சிமீதும் பொய்வழக்குகளைப் போட்டு பழிவாங்கலில் ஈடுபட்டுள்ளார்.

இவை அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு ஜோடிக்கப்பட்ட வழக்குகள் என செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

கருணாநிதியின் இப்பழிவாங்கல் நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே அண்மையில் கண்ணப்பன் போன்ற ஊழல் பேர்வழிகளைக் கட்சியில் சேர்க்கமாட்டோம் என்று ஆவேசமாகக் கூறியுள்ளமையாகும்.

ஊழல் செய்பவர்களை எமது கட்சியில் அனுமதிக்க மாட்டோம் என்று பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்தார் ஆனால், இப்போது தனது நலன்களுக்காக கண்ணப்பனை தன்னுடன் சேர்த்துள்ளார் என்று ஜெயலலிதா குறை கூறியுள்ளார். (உ-9)

# மீண்டும் துளிர் விடும் இந்திய - கனேடிய உறவு

(ரொறன்ரோ)
இந்தியாவுடனான அரசியல் பொருளாதார உறவுகளை மீண்டும் கட்டியெழுப்புவதாக கனடா உறுதி பூண்டுள்ளது.

கடந்த3 வருடங்களுக்குமுன்னர் இந்திய அரசு, புதுடில்லியில் தொடர்ச்சியாக மேற்கொண்ட அணுக்குண்டு சோதனைகளை அடுத்து கனடா அரசியல் மற்றும் பொருளாதார தடையை அமுல்படுத்தியது தெரிந்ததே.

இதேவேளை, கட்டுப்பாடுகளை கனடா தொடர்ந்தும் கடைப்பிடிக்கும் என்றும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் யோண்ஸ்பெல்லி தெரிவித்துள்ளார். (உ-7)

உத்தரப் பிரதேசத்தில் தொடரும்

# இந்து முஸ்லிம் கலவரம் 12 பேர் படுகொலை

(புதுடில்லி)
இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்டுவரும் மதமோதல்களில் மேலும் நால்வர் கடந்த ஞாயிறன்று பலியாகியுள்ளனர்.

முஸ்லிம்களின் புனித நூலான திருக்குர் ஆன் புதுடில்லியில் எரியூட்டப்பட்டதை அடுத்தே இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் கலவரங்கள் ஏற்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து தினத்தில் மட்டும் அங்கு 12 பேருக்கு மேல் கொல்லப்பட்டுள்ளனர். (உ-9)

# இறந்த கால்நடைகளை அகற்றும் பணியில் ரஷ்ய இராணுவத்தினர்

(லண்டன்)
பிரிட்டனில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட தென்மேற்குப் பகுதிக்கும், வடமேற்குப்பகுதிக்கும் அந்நாட்டரசு ஏராளமான இராணுவத்தை அனுப்பி வைத்துள்ளது.

வெட்டப்பட்ட கால்நடைகளின் சடலங்களை அழிப்பது மற்றும் பாதிக்கப்பட்ட கால்நடைகளை இனம் காணுதல் போன்ற நடவடிக்கைகளுக்காகவே சுமார் 200 துருப்புக்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அழிக்கப்பட்ட கால்நடைகளை அப்படியே விட்டு வைப்பதால் மீண்டும் புதிய புதிய நோய்கள் தொற்றுவதாக பண்ணையாளர்கள் செய்த முறைப்பாட்டை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது. [உ-7]

# சந்திப்பு

(ஸ்கொக்கில்)
மசதோனியாவின் தலைநகர் ஸ்கொககிலில் ஐரோப்பிய வெளியுறவுக் கொள்கை தலைமை அதிகாரி ஜவில் சொலானோ நேற்று சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் ஐகோட் இதராவும் இச் சந்திப்பில் பங்கு கொண்டுள்ளார். [உ-7]

# வறுமையில் வாடும் 26 கோடி இந்திய மக்கள்

(புதுடில்லி)
இந்தியாவில் வறுமைக் கோட்டின் கீழ் 26 கோடி பேர் வாழ்வதாக கணக்கிடப்பட்டுள்ளது

இதேவேளை, கடந்த ஆண்டில் இந்தியாவின் சனத்தொகை 100 கோடி என கணக்கிடப்பட்டதும் இதில் கால்ப்பங்கினர் வறுமையில் வாடுவது குறிப்பிடத்தக்கதாகும். (உ-9)

# காஷ்மீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## காண்பதற்கு சோனியா அழுத்தம்

(புதுடில்லி)
இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் காஷ்மீர்ப் பிரச்சினை குறித்துபாகிஸ்தானுடன் விரைவாக பேச்சுக்களை நடத்தவேண்டுமென காங்கிரஸ் தலைவி சோனியா அழுத்தம் கொடுத்துள்ளார்.

மேற்படிப் பிரச்சினை குறித்து அரசு தொடர்ந்தும் இழுத்தடிக்காது.

விரைவில் பேச்சுக்களை நடத்தி அப்பகுதி மக்களுக்கு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க முன்வர வேண்டுமென சோனியாகாந்தி பிரதமரை கோரியுள்ளார்.

இதேவேளை, ஜம்முகாஷ்மீரில் இந்திய அரசுக்கு எதிராக போராடிவரும் கெரில்லாக்களுக்கு பயிற்சி அளிப்பதையும ஆயுதங்கள வழங்குவதையும்பாகிஸ்தான் அரசு நிறுத்தும் வரை அதனுடன் பேசும் உத்தேசமில்லை என இந்திய அரசாங்கம் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

# டில்லியில் குர்ஆன் எரிப்பு கண்டித்து ஆர்ப்பாட்டம்

(டாக்கா)
அண்மையில் புதுடில்லியில் முஸ்லிம்களின் புனித குர்ஆன் எரிக்கப்பட்டதைக் கண்டித்து டாக்காவில் உள்ள முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியாளர்கள் புத்தர் சிலை உடைத்ததைக் கண்டித்து புதுடில்லியில் முஸ்லிம்களின் புனித குர்ஆனை எரித்தசம்பவம் அண்மையில் இடம் பெற்றது தெரிந்ததே.

இச் செயலைக் கண்டித்து டாக்காவில் உள்ள முஸ்லிம்கள் ஒன்று கூடி ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். (உ-9)

## செய்திப்பரல்

★ பங்களாதேஷின் பிரதமர் ஷேக்ஹசீனா எதிர்வரும் யூன் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்கு முன்னரே தான் பதவிவிலகவிருப்பதாக அறிவித்துள்ளார்.

★ இந்தோனேஷியாவின் எஷில் மாகாணத்தில் இடம்பெறும் வன்செயல்களில் 10 பேர் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

★ கயானா நாட்டில் மீண்டும் ஜனாதிபதித் தேர்தல்நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி பாரத்யக்டியோவே மீண்டும் தெரிவாவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

★ இலண்டன் பிபிஸி கட்டடத்திற்கு முன்னே சந்தேகத்திற்கிடமாக நிறுத்தப்பட்ட வாகனம் ஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது. [உ-9]

# இறந்தவரின் நுரையீரலால் உயிர் பிழைத்த பெண்

## சுவீடன் மருத்துவர் சாதனை

(ஸ்டொக்ஹோம்)
இருதயத் துடிப்பு நின்று இறந்த ஒருவரது நுரையீரலை எடுத்து இன்னொரு பெண்ணுக்குப் பொருத்தி மருத்துவ உலகில் சாதனை படைத்த சம்பவம் அண்மையில் சுவீடன் நாட்டில் நிகழ்ந்துள்ளது.

நுரையீரல் கோளாறினால் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த பெண் ஒருவருக்கு சுவீடன் மருத்துவர்கள் மாரடைப்பால் இறந்து இருதயத் துடிப்பும் நின்றுபோன ஒருவரது நுரையீரலை மாற்றி அப் பெண்ணை உயிர் தப்பவைத்துள்ளனர்.

பொதுவாக விபத்து மற்றும் தீராத நோயால் பாதிக்கப்பட்டவர்களின் மூளை செயற்படுவது நின்றதும் அவர்களின்

→ 2ஆம் பக்கம் பார்க்க

## உலக தரிசன அறிவுப் போட்டி இல - 8

முழுப் பெயர்: ..........................................

முகவரி: ..........................................

— — — — — — — — —

பிறந்த திகதி: — — — — — — — — —

போட்டியாளர் கையொப்பம் — — — — — — — —

பெற்ற புள்ளிகள்: — — — — — —

வினைபகை என்றிரண்டின்
எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்
குறள்

# வலம்புரி

## நீதிபதியின் நன்முயற்சி

யாழ்ப்பாண மாநகர சபையின் செயற்பாடுகளில் ஏற்பட்ட சிக்கல் வலுத்துப்போனதற்கு ஒரு வகையில் பொது மக்களும் காரணமென்பதை ஏற்றுத்தானாக வேண்டும். இடும் புள்ளடியை சற்று ஆற அமர சிந்தித்து போடாமல்விட்டிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிராது. கதிர்காமத்தில் பூசகரும் யாழ்ப்பாணத்தில் கோவிலுமென்றால் பூசை எங்ஙனம் நடைபெறமுடியும். கோவிலில் நிற்கும் தீவெட்டிக்காரரும் தீபம் காட்ட வெளிக்கிட்டு விடுவார். அந்த நிலைதான் இப்போது யாழ். மாநகரசபையில் நடக்கிறது. நான் ஆணையிட்டால். அது நடக்காவிட்டால் பதவியிழப்பு, சேவை நீக்கம் என்றெல்லாம் சட்டம் தெரியாது நடக்கும் நாடகம் ஒரு புறம்.

மறுபுறத்தில் தந்தையின் ஈமைக்கிரியைக்காக கொழும்பிலிருந்து வந்த இளம் டாக்டரை அதோ கிளினிக் மேடை நடிப்பது உங்கள் கடமை என்பது போல் கட்டிக்காவும் ஊர்வலம், இளம் டாக்டரும் நிலைமை புரியாமல் புகுந்துவிட்டார். ஆனாலும் வைத்தியர்களெல்லோரும் யாழ். மண்ணை விட்டு வெளியேற இளம் டாக்டர் ஒருவர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சேவையாற்ற வந்திருப்பது பாராட்டுதற்குரியதே நிச்சயமாக அவர் மீண்டும்கொழும்பு செல்ல மாட்டாரென மக்கள் நம்புகின்றனர். அவ்வாறு அவர் மீண்டும் கொழும்பு செல்வதாயின் ஒழுங்கான சேவையைக் குழப்பிவிட்டுப் போவதாகவே மக்கள் கருதுவர். வந்து நிற்கும் நான்கு நாளுக்கும் நாலு பணம் உழைத்து விடுவோமென ஒரு டாக்டர் சிந்திப்பாராயின் அதனை விடக்கொடுமை எதுவும் இருக்க முடியாது.

நிலைமைகள் இப்படியிருக்க ஊழியர்களின் சம்பள நிறுத்தம் சிகிச்சை நிலைய செயற்பாடுகள் குறித்து யாழ்ப்பாண நீதிபதி இ. விக்னராஜா அவர்கள் சமரச முயற்சியொன்றை மேற்கொண்டார். யாழ், மாநகர நிர்வாகம் சரிந்துகொண்டு போக, நிலைமை இவ்வளவு தூரம் முற்றியும் உரியவர் யாழ்ப்பாணம் வராத நிலையில் நீதிபதியின் 'நடவடிக்கை பொறுப்பு வாய்ந்தது மட்டுமன்றி பாராட்டுக்கு உரியதுமாகும் நீதிபதியின் சமரச முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவது அனைவரினதும் கடமை.

---

உலகநீர் தினம் இன்று

# உடல்வாட்டமின்றி உயிர் காக்கும் தண்ணீரின் உபயோகம் பற்றி உரைக்கின்ற உண்மைகள்

உலக நீர் தினம்
தொடர்பாக இக் கவிதை
இங்கு பிரசுரமாகிறது.
(ஆ.ர்)

தரணியின் அயலில்
தளம்பிக் கொண்டிருக்கும்
தண்ணீரின் தினமின்று!
முக்கால் உலகினிலும்
முடிச்சிட்டு-நீருள்
சிக்காத இடங்களையும்
மண்ணின் கீழ்
மணம்புரிந்த
மண்நீரின் தினமின்று!

●

பல கோடி ஆண்டுகள் முன்
பூமி புதிதாகப்
பிறந்ததன் பின்
ஆண்டாண்டாய்-வானம்
அழுது கொண்டிருந்ததுவாம்!
அதுவிட்ட;
கண்ணீர் என்பதாலோ-கடல்
இன்னமும் இங்கு
கரித்துக் கொண்டிருக்கிறது?

●

வானத்தின்-அந்த
நீண்ட நாள்த்
தண்ணீர்த் தூறலில்தான்
பூமிப்பெண்-இங்கு
முதன் முதலாய்ப்
பூப்படைந்தாள்!
ஆண்டாண்டாய்
நிகழ்ந்த-அந்த
தண்ணீர்த்தரிசனத்தில்
தரணிக்கென்றொரு
தலைவன் தரப்பட்டான்!

●

பூமா தேவியின்
காயப்பட்ட
இடங்களிலெல்லாம்
தண்ணீர்——
கடல் என்று
சொல்லிக்கொண்டு
காத்திருக்கத் தொடங்கியது
அதுதான்
பூமிக்கான-தண்ணீரின்
முதல் பிரவேசம்!

●

அந்த நாட் தொடக்கம்
பூமிக்கு-தண்ணீர்
தலைவனாக
ஆகிவிட்டான்!
தரையினைச் சூழ்ந்து
காவல் காக்கவும்;
அவ்வப்பொழுது-கரைக்கு
அலைகளை அனுப்பி
அணைத்துக் கொள்வதிலும்
ஆனந்தப்பட்டான்!

●

அந்தத் தண்ணளி
நாளின் பின்பு-இங்கு
தண்ணீருக் கென்றொரு
தனித்துவம் வந்திற்று!
இந்த உலகின்
முதல் உயிரைக்கூட
தண்ணீர் தானே
தாலாட்டியுள்ளது.
இந்த மென்நீரில்த்தான்
எமது உயிர்ப்பயணம் கூட
உருவாகித் தொடர்கிறது!

●

கடல்நீர்-தண்ணீரின்
ஆதிவாசி!
மண்ணின் கீழ்ச்சென்ற
மழைநீர்
பாறைகளுடன் நின்று
பறையத்
தொடங்கியபோது தான்
ஊற்று நீர்- இங்கு
உருவாகத் தொடங்கியது!

ஆற்று நீரும்
ஊற்று நீரும்
அழகான தண்ணீர்
உப்புப் பயலுடன்
தப்பேதும் செய்யாததால்
தூய்மையாய் இருந்திங்கு
தாகத்தைத் தீர்க்கிறது!
பூமிப் பெண்ணினது
கனிமங்களைக்
கவர்ந்ததால்த்தான்
கடல் நீரில்- அந்த
கரிப்புச் சுவை இருக்கிறது!

●

தண்ணீர் ...
ஐதரசனும் ஒட்சிசனும்
இணைந்து நடத்துகின்ற
இனிய இல்லறம்!
உயிருள்ள இயந்திரங்களை
இயக்க விடுகின்ற
எரிபொருள்த் திரவம்!
எல்லா உடல்களுள்ளும்
தொண்ணூறு வீதமுள்ள
ஆக்கிரமிப்பு ஆட்சியாளன்!
தவளைகளின் கற்பப்பை!
மீனினத்தின்
சரணாலயம்!
மீனவனின் தொழிற்சாலை!
விவசாயியின் மூலதனம்!
தாவரத்தின் வேர்களினை
தேடி அலையவைக்கும்
திருட்டுப் பேர் வழி!
மேகமாய்ச் செல்கையில்
மென்மையின் இலக்கணம்!
வெள்ளமாய்ப் பாய்கையில்
வன் மயின் தலைக்கனம்!
நதிகளாய் நெளிகையில்
நங்கையின் மறு பிரதி!
அருவியாய்க் கொட்டையில்
வெண்நிற நெருப்பு!
கிணற்றுக்குள் உள்ளபோது;
அடக்கத்தின் அடிப்படை
அலைகளாய் எழுகையில்
ஆற்றலின் ஆளுமை!
எல்லாப் பிறப்பும்
பிறந்து இளைத்து- பின்
ஆவியாய்ச் செல்கையில்
வாயுவின் புத்திரன்;
வானத்தின் சிறைக்கைதி!

●

ஐதரசன் இணைப்பென்னும்
அன்புப் பிணைப்பில் தான்
அங்கும்
ஆட்சி நடக்கிறது!
பாலைவனத்தில்- இது
பவளத்திலும் விலை போகும்
பணக்காரப் பாணம்!
தவிர்க்க முடியாத

**ரீ.ரீ.மயூரன்**
யாழ்

தாகப் பொழுதுகளில்
ஏழையும் செல்வனும்
பேதங்கள் பாராது
இரந்து கேட்கின்ற பிச்சை
ஏந்துகின்ற
பாத்திரத்தில் தான்- இங்கு
ஏற்றத் தாழ்வு
மற்றும்படி
எல்லாமும் ஒன்றுதான்
இத்தனை வருடமாக
எடுக்க எடுக்க
கொடுத்துக்
கொண்டிருக்கும்- இத்
தண்ணீர் வள்ளலுக்கு
இத்தனை கொடுத்தும்
''எம்மவர் போல்''
தடிப்பென்றெதுவும்
ஏற்படவில்லையே?

●

அடுத்து————
மனதுகாயப்பட்டால்
கண்களில் ஊறும்
கண்ணீர் இருக்கிறதே!
அதுவும்
தண்ணீருக்குத்
தூரத்துச் சொந்தம்தான்!
நோயறுக்கும்
மருந்தினைப்போல்,
இதுவும்
கவலையெல்லாம் கரைத்து
நீராக்கி நீக்கிறது!

●

கானல் நீரென்பது———
பாட்டிமார் சொல்லும்
பேய், பூதம் போல;
'பெயர் மட்டும்' இருக்கிறது;
நிஜம் எல்லாம்
''நத்திங்'' தான்!!

●

உலகின் சனத்தொகையில்
ஆறில் ஒருவருக்கு
அருந்தும் நீர்
இல்லையென்ற
அறிக்கையை நீர் அறிவீரா?
ஆழத்துக் கிணறுகளில்
அள்ளுகின்ற நீரையெனி
'ஆய்' என்று சொல்லிவிட்டு
அங்காலே எறிவீரா?

●

ஆய்வாளர்
அறிக்கைப்படி
இங்கத்து நீருமெல்லாம்
ஒருநாள்— ——
உவர் நீராய் மாறும்!
உணர்வுகளை அறுக்கின்ற
பெரும் தாகம் தோன்றும்
அப்போதே எமக்கு
தண்ணீரின் தரம்புரியும்
பின்புதான்
அதற்கான- எம்
தவமும் தொடங்கும்!

●

இதுவோ————
தண்ணீர்ப் புகழ்பாடும்- ஒரு
தமிழின் ஏற்பாடு- அந்த
ஆதி காலத்துப்
பூமி வாசிக்கு
எழுத்துப் பூத்தூவி
நன்றிக்கடன் செலுத்தும்- ஓர்
நற்கடமை!
கடவுளைப் போல்
எங்கும் நிறைந்த ஒன்றை
என் எழுத்துக்குள
எடுத்துரைக்கும்
சிறு முயற்சி அவ்வளவே!

---

## தவக்காலச் சிந்தனை - 23



எந்த ஒரு காரணமுமின்றி தனக்குத் தானே துன்பம் வேண்டுமென்று அதை நாடிச் செல்வோர் யாருமில்லை. தான் செய்த குற்றத்திலிருந்து தப்பிச் செல்லும் இந்த உலகில் செய்யாத குற்றத்தை ஒப்புக்கொள்வோர் யாருமில்லை; இது, அன்று இயேசுவின் மேல் குற்றம் கண்டுபிடித்த சட்ட வல்லுநர்களுக்கும், பரிசேயர்களுக்கும், தெரியும். ஆனால் இயேசுவின் மேலிருந்த பொறாமைக் குணமானது இந்த உண்மையை மறைத்து விட்டது. இயேசுவின் புகழ் மென்மேலும் பரவியதை ஏற்றுக் கொள்ளாத குறுகிய மனப்பான்மையே இந்த பொறாமைக் குணத்திற்குக் காரணம். நாமும், பிறர் மேலுள்ள வெறுப்பின் காரணமாக அவர்களின் நற்செயல்களிலும் குற்றம் கண்டுபிடிக்கின்றோம். அவர்களைப் பாராட்டத் தவறுகிறோம். பரிசேயர்கள் மற்றும் சட்ட அறிஞர்களைப் போல் நாமும், இயேசுவைப் போன்று நன்மைகள் செய்வோரை வெறுத்து ஒதுக்குகின்றோம்; இந் நிலையிலிருந்து மாறி நல்ல மனிதர்களாக நாம் வாழ்வதுடன் நன்மை செய்யும் அனைவருடனும் கரம் கோத்து இறையரசின் வருகையை விரைவு படுத்துவோம்;

காவலன்

---

## சிறுவர் உரிமை விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட புன்னாலைக் கட்டுவன், ஈவினை, குப்பிளான் பகுதி கிராம மட்டக் குழுக்களுக்கான சிறுவர் உரிமைகள் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் எதிர் வரும் 26 ஆம் திகதி அவ்வப் பகுதி கிராம அலுவலர்கள் தலைமையில் பிரதேச மட்ட சிறுவர் உரிமைகள பயிற்சியாளர்களான செல்வி ந. நல்லையா, செல்வி ப. புஸ்பலே ஜினி ஆகியோரால் நடத்தப்படவுள்ளன;

(உ-2)

---

## சாயி அருளமுதம்



சன்மார்க்கம், நீதி நெறி, லோகாயதம், தொழில்நுட்பம், ஆன்மீகம் ஆகிய துறைகளில் மனிதன் முன்னேறுவதற்குத் தடையாகவிருக்கும் குழப்பத்தையும், முரண்பாடுகளையும், தீர்ப்பதற்கு மனிதன் கைக்கொள்ள வேண்டிய வழியாதெனில், மனிதன் எப்படி வாழ வேண்டுமோ அப்படியான முறையில் பூரணமாக வாழ்ந்து, தன்னுடைய யதார்த்த நிலையான தெய்வீக நிலைக்குத் தன்னை உயர்த்திக் கொள்வதாகும். இதுவே சாஸ்வதமான, சர்வலோகத்திற்கும் உரிய உபதேசமாகும். புத்தியின் செயற்பாட்டினால் உருவாகும் எண்ணங்கள் மனத்தில் உணர்வுகளாகப் பிரதிபலித்து கைகள் மூலம் செய்கைகளாக நிறைவேற்றப்பட வேண்டும். எண்ணம், சொல், செயல், ஆகியவை மூன்றும் ஒன்றாக இணைக்கப்படவேண்டும். ஒன்றையொன்றுநிரப்புபவையாக அவை விளங்க வேண்டும். ஒரு பரிசுத்தமானவருக்கு அல்லது ஒரு மகாத்மாவுக்கு உரிய அடையாளம் ''மனஸ்யேகம், வசஸ்யேகம், கர்மனேகம்'' என்பதாம். அதாவது ஒரு எண்ணம், ஒரு வாக்கு ஒரு. செயல் என்பதாகும்;

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

மங்கையர்மனம்மயங்கும் மங்காத அசல் 22கரட் தங்க நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம் அதுதான்
**மகாநதி ஜுவல்லறி**
72A, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
(கி/1623)

# தமிழர்களின் பிரச்சினையை தீர்க்க தமிழ்க்கட்சிகளுடன்பேசவேண்டும்

## பாராளுமன்றில் அமைச்சர் டக்ளஸ்

[கொழும்பு]
தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானபேச்சுவார்த்தைக்கு வரும் வரை அரசாங்கம்காத் திருக்காது ஜனநாயகவழிக்கு திரும்பிய தமிழ்க் கட்சிகளுட னும் தமிழ் மக்களின் பிரதி நிதிகளுடனும் அரசு பேச வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாநேற்று பாராளுமன்றத்தில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

வரவு செலவுத் திட்டநிதிச் சட்டமூலத்தின் மீது உரை யாற்றுகையில் அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா மேலும் பேசுகையில் கூறியதாவது,

விடுதலைப் புலிகள் இப் போது பதுங்குவது, தாக்கு தல்களை நடாத்துவதற்குத் தான். அவர்கள்பேச்சுவார்த் தைக்கு வருவார்களென்று எதிர்பார்ப்பதைவிட ஜனநா யகத்திற்குவந்த தமிழ்க் கட்சி



களுடன் பேச்சு நடாத்தி தீர் வொன்றைக்காண அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுள் ளார். [ம]

# தடைக்கு எதிராக வழக்கு

(லண்டன்)
பிரித்தானிய அரசினால் தடைசெய்யப்பட்ட 21 அமைப்புகளும் அத்தடையை எதிர்த்து லண்டன்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய நட வடிக்கை எடுத்து வருகின் றன.

தடையை எதிர்த்து வழக் குத்தாக்கல் செய்வது தொடர் பாக முஸ்லீம் பாராளுமன்றம் என்ற அமைப்பு கடந்த வாரம் தடைசெய்யப்பட்ட 21 அமைப்புக்களின் பிரதிநிதி களையும் அழைத்து ஆலோ சனைக்கூட்டம் ஒன்றை நடத் தியுள்ளது. [வ]

# க. பொ. த (சா.த) கொக்குவில் இந்துவின் பரீட்சைப் பெறுபேறுகள்

[யாழ்ப்பாணம்]
கடந்த ஆண்டுஇடம்பெற்ற க:பொ.த [சா/த] பரீட்சை யில், கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னணிப் பெறு பேறுகள் வருமாறு, நிலாணி கணேசரட்ணம் 8 டி, 2 சி, விஜயரட்ணம் அஜீதன் 8 டி, 1 சி, செல்லையா பிரசாந்தன் 8 டி, 1 சி, 1 எஸ், லிங்கேஸ் றொசாந்தன் 8டி, 1சி, 1எஸ் வசந்தராசா அகிலன் 7 டி, 2 சி, அம்பிகை சிவ ஞானம் 7டி, 2சி, 1 எஸ், ஜெயமலர் ஜெயபாலன் 7 டி, 1 சி, 2 எஸ், சாமந்தி சந் திரபாலன் 7 டி, 3 சி, தர் சிகா தயாளநேசன் 7 டி, 1 சி, 2 எஸ்.

நால்வர் 6 விசேடசித்தி களுடனும்,10 பேர் 5 விசேட சித்திகளுடனும் சித்தியடைந் துள்ளமைகுறிப்பிடத்தக்கது.

# யாழ்.மாநகர ஆணையருக்கு யாழ்.நீதவான் கடிதம்

(யாழ்ப்பாணம்)
யாழ் மாநகர சபையில் எழுந்துள்ள பிரச்சினைதொ டர்பாக நேற்று முன்தினம் யாழ். நீதி மன்றத்தில் இடம் பெற்ற சம்பந்தப்பட்டவர் களுடனான கலந்துரையாட லில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் இராசா தணிகாசலத்திற்கு யாழ். நீதி வான் இ. த. விக்னராஜா கடிதம் ஒன்றை நேற்று யாழ். நீதிமன்றத்தில் வைத்துக் கையளித்துள்ளார்.

இக் கடிதத்தில் யாழ் நீதி மன்றத்தில் நேற்று முன்தினம் கலந்துரையாடப்பட்டு இணக் கம் காணப்பட்ட விடயங்கள் விளக்கி எழுதப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு;

★ 21.03.2001 இல் நடந்த நேர்முகப் பரீட்சையில்தெரிவு செய்யப்பட்ட டாக்டரின் பெயரை மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் அங்கீகாரத்துக்கு அனுப்பி அங்கீகாரம் கிடைத்து அவர் கடமைப் பொறுப்பை ஏற்கும் வரை தொடர்ந்தும் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் யாழ். மாநகர சபைப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி யாகக் கடமை ஆற்றுதல்.

★ யாழ்.மாநகரசபை முதல் வர் கொழும்பிலிருந்து வந் ததும் மாநகர சபை சுகாதா ரப் பகுதியில் கடமையாற்றும் ஊழியர்களின் பிரச்சினை பற்றி சுமுகமான முறையில் தீர்ப்பதற்கான முடிவை எடுத் தல்.

★ யாழ் மாநகர சபை ஆணையாளர் இக் கலந்துரை யாடலில் தெரிவித்தவாறு ஊழியர்களுக்கான கொடுப் பனவுகளை உடனடியாக வழங்குவதற்கு ஆவன செய் தல்.

மாநகர சபை ஆணையா ளர் இராசா தணிகாசலத் துக்கு முகவரியிடப்பட்ட இக் கடிதத்தின் பிரதிகள் யாழ். மேயர் ரவிராஜ், பிரதி மேயர் செல்லன் கந்தையன், வைத் திய கலாநிதி இ.தெய்வேந் திரன் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ம)

### மிதிவெடி--

இவ்வாறு 52 ஆவது பிரிவு கட்டளை அதிகாரி நேற்று தென்மராட்சி மக்களுக்கென வெளியிட்டசெய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்:

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப் பதாவது,

மிதிவெடி மற்றும் பொறி வெடி அனர்த்தங்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க இராணுவ பொறியியலாளர் கள்,தென்மராட்சிப்பகுதியில் வெடிபொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதியில் மிதிவெடி அனர்த்தத்தால் நான்கு பொதுமக்கள் பாதிப்படைந் துள்ளனர். எனவே மக்களின் பாதுகாப்புக் கருதி எடுக்கப் படும் மேற்படி நடவடிக்கை யால் பொதுமக்களுக்கு ஏற் படும் சிரமங்களுக்கு வருந்து கின்றோமென்றும்அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (இ)

### எரிகோசல்---

தியாலங்கள் வரை நீடித்த இப்பேச்சுவார்த்தையின் போது புலிகளின் அடுத்த கட்ட யுத்தநிறுத்த அறிவிப்பு சமாதானப் பேச்சுவார்த்தை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகி யன தொடர்பாகவும் பேசி யுள்ளதாகத் தெரியவரு கிறது. (ம)

### கடற்படை---

தாக்குதல்களைநடாத்தியதாக வும் தெரிவித்துள்ளன,

இதே வேளை இத்தாக்கு தல் தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவிக்கையில் புலி கள் கடல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாகவும், அப் போது கடற்படையினர் தம் மீது தாக்குதல் நடத்திய தாகவும் தாம் திருப்பித் தாக் சியதில் அதிவேக டோறாப் படகு மூழ்கடிக்கப்பட்டதாக வும் தெரிவித்துள்ளதுடன்,

அதில் இருந்த நவீன ரக ஆயுதங்களைத் தாம் கைப் பற்றியதாகவும், அறிவித்துள் ளனர்:

இதன் போது தமது தரப் பில் நால்வர் உயிரிழந்ததா கவும் புலிகள் அறிவித்துள்ள னர். [ம]

### வண்ணை-...

விக்கப்படுகிறது.

இதேவேளைவைத்தியகலா நிதி தெய்வேந்திரன் சேவை யில்இருந்து ஓய்வுபெறப் போ வதாக வெளிவந்த செய்தி களையடுத்து சனசமூக நிலை யங்கள், மாதர் சங்கங்கள், தொண்டர்குழுக்கள்,அவரின் சேவைதொடர்ந்தும்கிடைக்க வேண்டும்மென கோரிக்கை விடுத்து மகஜர் அனுப்பியவண் ணம்முள்ளனர் [ம]

### ஜனாதிபதி --

வே முதற்தடவையாகும்.

இதேவேளை ஜனாதிபதி யுடன் ஐரோப்பாவுக்கு சென் றிருந்த தகவல் தொடர்பு பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க இன்று நாடு திரும்புகின்றமை குறிப்பிடத்தக்கது. [இ]

# சமூகம் கொடுக்கவும்

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல விளையாட்டுக் கழகங்களின் தலைவர்கள் செயலாளர்கள் நாளை வெள்ளிக்கிழமை பிற் பகல் 3 மணிக்கு சுழிபுரத்தில் உள்ள பிரதேசசபைக் காரியா லயத்துக்கு சமுகமளிக்குமாறு பிரதேசசபைத் தலைவர் என். திருலோகநாதன் கேட்டுள்ளார்.

கூட்டத்திற்கு வரும் பொழுது விளையாட்டுக்கழகத் தின் கடிதத்தலைப்பு பற்றில் ஆகியவற்றையும் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள் ளது. (வ)

### சமாதானம்--

பட்டால் இந்தியாவையும் நான் அழைப்பேன்.

தமிழீழக் கோரிக்கையை விடுதலைப் புலிகள் கைவிட் டுள்ளனரென்றே நான் நம்பு கின்றேன். தமிழ்க் குழுக் களிடையே தமிழீழ விடு தலைப் புலிகள் மிகவும் செல் வாக்குப் பெற்றவர்கள். ஆனால் அவர்கள் சகல மக் களையும் பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் அல்ல என் றும் ஜனாதிபதிமேலும் தெரி வித்துள்ளார். (இ)

### முல்லைத்தீவில்----

கிபிர்,மிக்விமானம் குண்டு வீச்சில் சுண்டிக்குளம்குருசடி யைச்சேர்ந்த தம்பிப்பிள்ளை ரவிராஜா( 36வயது)அவரது மனைவி ரவிராஜாரேணுகா (வயது30)குலசேகரம் தங்க வேல்(வயது35) மரியாம் பிள்ளைபிலோமினாஆகியோ ரே உடல்சிதறிப் பலியா கினர் குண்டுவீச்சுச் சத்தங் களால் வவுனியாநகரம் கலங் கியதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன

### முல்லை---

மட்டக்களப்பு]
★ மேஜர் கலா
[மார்க்கண்டு காஞ்சனா யாழ்ப்பாணம்)
★ கப்டன் மறவன்
[சின்னத்தம்பி கதிர்காம நாதன் யாழ்ப்பாணம்] [வ]

அழகிற்கு அழகூட்டும் தங்க நகைகளை உடனுக்குடன் செய்து தருபவர்கள்
**நியூ ராதிகாஸ் நகை மாளிகை**
189. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(கி/ 1622)

# தாய்லாந்து புலிகளை தடைசெய்ய மாட்டாது

(கொழும்பு)
தாய்லாந்தில் விடுதலைப் புலிகளின் எந்தவிதமான நட வடிக்கைகளும் இல்லாததால் புலிகளைத் தடைசெய்ய வேண்டிய அவசியம் ஏற்பட வில்லை என்று தாய்லாந்து வெளிவிவகார அமைச்சர் சுருக்கியா சந்திரதாஸ் தெரி வித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தாய் லாந்தை தமது ஆயுதக் கடத் தல்களுக்கு தளமாகப் பயன் படுத்தி வருவதாக இலங்கை அரசு கூறிய குற்றச் சாட்டில் எந்தவித உண்மையுமில்லை என்று விசாரணைகளின் பின் தெரிய வந்துள்ளதுடன், விடு தலைப் புலிகளின் ஆதரவா ளர்களோ, அவர்களது நட மாட்டமோ தாய்லாந்தில் இல்லை என்றும்அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பநிறுவனத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல்1.30 மணிக்கு திருநெல்வேலி முத் துத்தம்பி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் உயர்தொழில்நுட்ப நிறு வனப்பணிப்பாளர் ரி.இராஜ ரட்ணம் தலைமையில் நடை பெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக யாழ் தொழில்நுட்பக்கல்லூரி அதி பர் திரு.எஸ்.செந்தில்நாதன் கலந்துகொள்ளுகிறார். இவ் விளையாட்டுப் போட்டியில் சகல பழையமாணவர்களை யும்,நடப்புவருட மாணவர் களையும் கலந்துகொள்ளு மாறு பணிப்பாளர் நி.இரா ஜரட்ணம் கேட்டுள்ளார். [வ.37]

# கப்பல் பயணம்

(யாழ்ப்பாணம்)
''சிற்றி ஒவ் றிங்கோ'' பய ணிகள் கப்பல் இன்று 400 பயணிகளுடன் காங்கேசன் துறையிலிருந்து திருமலைக்கு செல்லும்.

இக்கப்பலில் பயணம்செய்ய பயண அனுமதி மற்றும் பயணச்சீட்டு பெற்றவர்கள் இன்று காலை 7 00 மணிக்கு, யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள ரான் அலுவலகத்துக்கு பயண ஏற்பாடுகளுடன் வருமாறு ரான் அதிகாரி கேட்டுள்ளார். [இ]

**சுயாழினி**
**தொலைத் தொடர்பு சேவை**
வெளிநாட்டு தொலைபேசி இணைப்புக்களை மிக மிக குறைந்த கட்டணத்துடன் உடனுக்குடன் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
**233, கச்சேரி நல்லூர்வீதி**
(மூத்தவிநாயகர் கோவிலுக்கு அருகாமையில்
**யாழ்ப்பாணம்.**
**T.P-021-3280**
(கி-1629)

**வெளிவருகிறது**
**ஆசிரியத் தொழில்**
நா. வரதராசா SLEAS
நூலின் விலை ரூபா 110 /...

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர் களது அச்சகத்தில் 2001 ஆண்டு மார்ச் மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.